இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளிக் கல்வி சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை

ESC1132/EPU1332 – முன்பள்ளிக் கல்வித் தத்துவங்கள்

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **11/06/2023** நேரம்: மு.ப 9.30 – மு.ப 11.30

பகுதி I

1. முன்பள்ளிக் கல்வி என்பதனால் நீர் கருதுவது யாது?
2. "பிள்ளை மையக் கல்வி" என்னும் பதத்தினை சுருக்கமாக விளக்குக.
3. இலங்கையின் முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோள்கள் ஐந்தினை (05) எழுதுக.
4. இலங்கையில் முன்பள்ளிக் கல்வி தொடர்பான எழுவினாக்கள் (issue) ஐந்தினை (05) பட்டியலிடுக.
5. "பங்குபற்றுதலுக்கான உரிமை" என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
6. "கின்ரர் காடின்" என்னும் எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக.
7. சீனாவின் முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோள்கள் ஐந்தினை (05) பட்டியலிடுக.
8. இலங்கையின் நாட்காப்பகங்களின் தொழிற்பாடுகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

(8 x 5= 40 புள்ளிகள்)

பகுதி II

9.

i. குறிக்கோள்கள், நோக்கங்கள் என்பவற்றினை வேறுபடுத்திக்காட்டுக.

(08 புள்ளிகள்)

ii. முன்பள்ளிக் கல்வியினால் அடையக்கூடிய குறிக்கோள் ஒன்றினை எழுதுக. நீங்கள் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கான பொருத்தமான செயற்பாடொன்றினை தெரிவுசெய்க. நீங்கள் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கான செயற்பாட்டினை எவ்வாறு ஒழுங்குபடுத்தி அமுல்ப்படுத்துவீரென பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

10.

i. இலங்கையின் முன்பள்ளிக் கல்வியின் வரலாற்றுப் பின்னணியை விபரிக்க.

(10 புள்ளிகள்)

ii. இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வாண்மைத்திறன் கல்வியையும் பயிற்சியையும் அளிக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தினைக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

11. "முன்பள்ளி ஆசிரியர் முன்பள்ளி பிள்ளைகளின் மாற்றுத் தாயாக விளக்க வேண்டும்".

i. இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி ஆசிரியரொருவரின் பிரதான வகிபாகங்கள் **ஐந்தினை (05)** உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

12. "ஆசிரியர்கள் பாடத்திட்டமிடலுக்கான குறிக்கோள்களை தயாரிப்பது மிக முக்கியமானது"

i. இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(07 புள்ளிகள்)

ii. முன்பள்ளிக் கல்வியில் அழகியல் / உடலியக்கத் திறன்கள் என்பவற்றிற்கான **ஐந்து (05)** குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

iii. மேலே நீங்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து அதனை உதாரணங்களுடன் விளக்குக. நீங்கள் குறிப்பிட்ட குறிக்கோளை அமுல்ப்படுத்துவதற்கான செயற்பாடொன்றினை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீரென விளக்குக.

(08 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றுள் ஏதாவது **இரண்டிற்கு (02)** சிறுகுறிப்பு எழுதுக.

i. போர்ச் சூழ்நிலையில் உள்ள பிள்ளைகள்
ii. நாட்காப்பகங்கள்
iii. பிள்ளை விருத்தி பற்றிய பிளேட்டோவின் கருத்துக்கள்
iv. பிள்ளையின் மிகச் சிறந்த ஆர்வம்

(10 x 2 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது